**O.S.No.16/2024**

வா.சா.1, திரு.முருகன்
நாள் : 31.07.2025 நேரம் : 11.25 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

நான் எத்தனை சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அனைத்து சொத்துக்களை பொறுத்து தாக்கல் செய்துள்ளேன், எண்ணிக்கை எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் அனைத்தும் எனது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன மேற்படி சொத்துக்களில் என்னை தவிர வேறு யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் என்னை தவிர்த்து நடராஜன், சண்முகசாமி, தங்கதுரை இன்னும் பல நபர்கள் அனுபவத்தில் உள்ளார்கள். மேற்படி பல நபர்கள் தாவா சொத்துக்களில் அனுபவத்தில் இருப்பதாக நான் கூறியுள்ளதில் மேற்படி நபர்களின் எண்ணிக்கை 60, 70 இருக்குமா என்றால் இருக்கலாம். மேற்படி நான் கூறிய நபர்கள் இந்த வழக்கை நடத்துவதற்கு என்னிடம் உடன்படிக்கை ஏதும் செய்து கொண்டார்களா என்றால் செய்யவில்லை, வாய்மொழியாக தான் உடன்படிக்கை செய்து கொண்டோம். மேற்படி நான் கூறிய நபர்கள் எந்த அடிப்படையில் தாவா சொத்துக்களில் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் விவசாயம் செய்து அனுபவத்தில் உள்ளார்கள். மேற்படி தாவா சொத்துக்களை அனுபவம் செய்வதற்கு எங்களுக்கு யார் அனுமதி வழங்கினார்கள் என்றாலும், ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தினார்கள் என்றாலும் ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று நாங்கள் தாவா சொத்துக்களில் வடபாதியை அனுபவம் செய்து கொள்ளலாம் தீர்ப்பு ஏற்பட்டது. மேற்படி அனுபவம் செய்து கொள்ளலாம் என தீர்ப்புரையில் உள்ளதா என்றால் உள்ளது. நான் 1954 ல் பிறக்கவில்லை என்றால் சரிதான். எனது உடன் பிறந்தவர்கள் 5 நபர்கள். எனது தகப்பனார் பெயர் சுப்பிரமணியன். எனது தகப்பனாரின் தந்தை பெயர் ஆறுமுகத்தேவர். மேற்படி

ஆறுமுகத்தேவரின் தகப்பனார் பெயர் முனியாண்டிதேவர். அசல் வழக்கு எண். 16/1954 வழக்கானது ஷகினாபீவி மற்றும் அவரது சகோதரர் முகமது காசிம் என்பவருக்கும் இடையில் நடந்த வழக்கு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் பாத்தியம் கோரி தான் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் பெரியசாமிதேவர், நாகுதேவர், செழியன், அழகர்கோனார் மகன், ராமுகோன், முத்துகோன் ஆகியோர் 3 முதல் 8 பிரதிவாதிகளாக நாங்களும் உழவடைதாரர்கள் என வழக்கில் தங்களை சேர்த்து கொள்ளுமாறு மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டு சேர்க்கப்பட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா ஆறுமுகதேவர் மேற்படி வழக்கில் கட்சிக்காரர் இல்லை என்றால் எனது தாத்தா இருப்பார், கிராமத்தில் உள்ளவர்கள் கட்சிக்காரர்களாக இருந்தார்கள். மேற்படி அசல் வழக்கில் கண்ட சொத்து விளக்கனேந்தல் அடிபிடிதாங்கி என்ற கிராமத்தில் உள்ள சொத்து என்றால் விளக்கேந்தல் உள்ளிட்ட பல கிராமங்கள் உள்ளிட்டு மேற்படி வழக்கு நடைபெற்றது. மேற்படி வழக்கில் ஊர் தலைவர்களும் முக்கியமான நபர்களும் வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்கப்பட்டிருந்தார்கள். மேற்படி அசல் வழக்கில் விளக்கனேந்தல் அடிபிடிதாங்கி என்ற கிராமத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து தான் வழக்கு நடைபெற்றது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் அந்த வழக்கின் வாதி முகமது காசிம் என்பவரின் தகப்பனாரின் கிரைய பாத்தியமான சொத்துகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களை 19.09.1912ம் தேதி மேற்படி முகமது காசிமின் தகப்பனார் அவருக்கும் , அவரது சகோதரர்களுக்கும் இனாம் செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்படி 1930ல் முகமது காசிம் மற்றும் அவரது சகோதரர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களும், இன்னும் பிற சொத்துக்களும் சேர்த்து 200, 300 ஏக்கருக்கு மேல் முகமது காசிமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்துக்கள் உட்பட மற்ற சொத்துக்களை இது நாள் வரையில் முகமது காசிம் மற்றும் அவரது வாரிசு வகையறாக்கள் பாத்திய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி என்னை போல் தாவா சொத்துக்களில் அனுபவத்தில் உள்ள மற்றவர்கள் வழக்கு நடத்துவதற்கு தயாராக உள்ளார்கள் என்றால் உள்ளார்கள். இனிமேல் வருவார்கள். 1954 ல் நடந்த வழக்கான அசல் வழக்கு எண். 16/1954 வழக்கில் வாதியான முகமது காசிமும் அவரது சகோதரியுமான ஷகினா பீவியும் தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்துக்கள் அனைத்தும் எங்களுக்கு பாத்தியம் என விளம்புகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அந்த வழக்கில் தான் அந்த வழக்கின் 3 முதல் 8 பிரதிவாதிகள் தங்களுக்கும் குடிவார பாத்தியம் இருப்பதாக கூறி தங்களையும் கட்சிக்காரர்களாக சேர்க்க சொல்லி மனு தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் மாவட்ட ஆட்சியரும் கட்சிக்காரராக இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த போதே கட்சிக்காரர்களுக்குள் சமரசம் ஏற்பட்டது என்றால் எனது முன்னோர்கள் நீதிமன்றத்தில் தீர்ப்பு ஏற்பட்டு வடபாதி எங்களுக்கும், தென்பாதி முகமது காசிம் வகையறாவுக்கு கொடுக்கப்பட்டது என கூறினார்கள். நான் கூறுவது போல தீர்ப்பு ஆக வில்லை என்றாலும், மேற்படி வழக்கின் வாதியான முகமது காசிமிக்கு வடபாதியும், 2 ம் பிரதிவாதியான ஷகினா பீவிக்கு தென்பாதியும் பாத்தியம் எனவும் தீர்ப்பானது என்றாலும், மேற்படி சொத்துக்களில் குடிவார பாத்தியம் கேட்ட அந்த வழக்கின் 3 முதல் 8 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்துக்களில் எந்தவித பாத்தியமும் இல்லை என தீர்ப்பானது என்றாலும் மேற்படி சொத்துக்களில் எந்தவிதத்திலும் பந்தக பாராதீனம் செய்ய கூடாது என தீர்ப்பு ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண். 16/1954 ல் உள்ள சொத்துக்களில் 3 ல் 1 பகுதி அந்த வழக்கின் 3 முதல் 8 பிரதிவாதிகளுக்கு 1 ஏக்கர் நஞ்சைக்கு வருடம் ரூ.12 வீதமும், 1 ஏக்கர் புஞ்சைக்கு வருடம் ரூ.4.8 அனாவும் முகமது காசிமுக்கும், ஷகினா பீவிக்கும் செலுத்த வேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் சொத்தில்

அனுபவம் செய்ய முடியாது என்று தீர்ப்பானது என்றால் எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து முகமது காசிம் தென்பகுதி நிலத்திற்கு நெல் மட்டும் பங்காக வாங்கி செல்வார், ஒருபோதும் பணம் பெற்றதில்லை. மேற்படி வழக்கில் அந்த வழக்கின் தாவா சொத்தில் விளையக்கூடிய நெல், கேழ்வரகு, மிளகாய், குதிரைவாலி போன்ற பயிர்களில் கிடைக்கும் உழவடையை அந்த வழக்கின் வாதியிடமும், 2ம் பிரதிவாதியிடமும் ஒப்படைக்க வேண்டும் என தீர்ப்பானது என்றால் தென்பகுதிக்கு மட்டும் விளையக்கூடிய விளைச்சலில் 3ல் 1 பங்கை அல்லது 4ல் 1பங்கை முகமது காசிமிடம் கொடுப்போம். மேற்படி அசல் வழக்கு எண். 16/1954ன் படி ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் நாங்கள் அந்த வழக்கின் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியிடம் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றால் தீர்பபு பற்றி எனக்கு தெரியாது. ஆனால் நாங்கள் முகமது காசிமிக்கு பணம் ஏதும் கொடுக்கவில்லை. அதேபோல் தாவா சொத்துக்களில் விளையும் நெல் மற்றும் கேழ்வரகு, குதிரைவாலி போன்ற பயிர்களில் கிடைக்கும் பங்கு பலன்களையும் நாங்கள் கொடுக்கவில்லை என்றால் முகமது காசிம் காலத்தில் அவர் வரும்வரை பெற்று கொண்டார். அதன்பிறகு யாரும் வாங்கவில்லை. முகமது காசிம் இறந்து 60 வருடங்கள் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது, நான் மிக சிறு வயதாக இருந்தேன். மேற்படி முகமது காசிம் மற்றும் ஷகினா பீவியின் வாரிசுகள் தற்போது உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வாரிசுகள் எங்கு உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் மேற்படி வாரிசுகளின் கண்காணிப்பில் தான் உள்ளது என்றால் சரியல்ல, நாங்கள் தான் தாவா சொத்தில் விவசாயம் செய்கிறோம். மேற்படி வாரிசுகள் என் ஊரில் தான் உள்ளார்கள் என்றாலும், சிலர் சென்னையில் உள்ளார்கள் என்றாலும், எனது கிராமத்தில் இல்லை என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களும், அவருக்கு பாத்தியப்பட்ட பிற சொத்துக்களும் முகமது காசிமின் வாரிசுகளின் பாத்திய மற்றும் பராமரிப்பில் தான் இதுநாள் வரை இருந்து வருகிறது என்றால் சரியல்ல, எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. நாங்கள் எதனடிப்படையில் தாவா சொத்துக்களில் அனுபவத்தில் உள்ளோம்

என்றால் இதற்கு முன்னதாக 1954ம் ஆண்டு தொடுக்கப்பட்ட வழக்கில் தென்பாதி உரிமையாளர்களுக்கும், வடபாதி விவசாயிகளுக்கும் என தீர்ப்பு ஏற்பட்டதன் அடிப்படையில் நாங்கள் தாவா சொத்துக்களில் அனுபவத்தில் உள்ளோம். மேற்படி 1954ல் தீர்ப்பின் படி எங்களுக்கு தாவா சொத்துக்கள் அனுபவம் என்பதற்கு அந்த தீர்ப்பை தவிர வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. பட்டா எனது தாத்தா பெயரில் உள்ளது. வேறு சிலரும் வடபாதி, தென்பாதி என பிரித்து தாவா சொத்துக்களை பொறுத்து பத்திரம் பதிவு செய்துள்ளார்கள். தாவா சொத்துக்களை பொறுத்து பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது தாத்தா பெயரிலோ, எனது தந்தை பெயரிலோ தாவா சொத்துக்களில் உள்ள பட்டாக்களை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பட்டாக்கள் எனது தாத்தா பெயரில் உள்ளது. மேற்படி பட்டாக்கள் UDR காலத்தில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.15 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.07.31 15:47:58 +0530